**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS.No. 391/2023**

**26.08.2025**

**P.W.1 - வீனா**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் மறு குறுக்குவிசாரணை**

11.06.2022 க்கு 3 நாட்களுக்கு முன் பணம் வேண்டும் என்று கேட்டார்கள். நான் எலக்ட்ரானிக் டிப்ளமோ படித்துள்ளேன் . எனக்கு மாதம் ரூ10 ஆயிரம் வருமானம் பெறுகிறேன். எனது கணவர் ஐடீ தொழில் செய்கிறார். ஒப்பந்தம் எப்போது கிடைக்கிறதோ அப்போது எனது வேலையை செய்வேன். 2020, 2021,2022 ஒப்பந்தம் தொடர்பாக எத்தனை டெண்டர் எடுத்தேன் என்றால் 2 அல்லது 3 ஒப்பந்த வேலை எடுப்பேன். மேற்படி டெண்டர்கள் தலா எவ்வளவு தொகைக்கு எடுத்தேன் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் ஒப்பந்த வேலை எடுத்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி கட்டுபவர் இல்லை. எனது கணவர் பிடெக் மெக்கானிக் படித்துள்ளார். எங்களுக்கு திருமணமாகி 5 வருடங்கள் ஆகிறது. எனது கணவர் வத்தலக்குண்டு ஐ. பெரியசாமி மில்லில் குவாலிட்டி இன்ஜினியராக வேலை செய்கிறார். எனது கணவரின் வருமானம் வருடத்திற்கு ரூ2 இலட்சம் பெறுகிறார்,. அதற்கான வவுச்சர் அவரிடம் கேட்டால் தான் தெரியும். ஏப்ரல் , மே மாத வட்டி கணக்கில் சேர்க்கவில்லை. பிரதிவாதியின் மகள் ரேஷ்மாவும், நானும் பணம் கொடுப்பதற்கு முன் தோழியாக பழகியுள்ளோம் . வீடு சம்பந்தமாக கடன் வாங்கியிருந்தார்கள். தோழி வீட்டில் இருக்கும் போதே பிரதிவாதி வேறொரு நபரிடம் கடன் பெற்றிருந்தபோது அவர் பிரதிவாதியை மனம் நோகும்படி பேசி கொண்டிருந்த போது நான் அங்கு இருந்தேன். மேற்படி சம்பவம் நடந்த தேதி சரியாக ஞாபகமில்லை. நான் மனம் வருத்தப்பட்டேன். மேற்படி சம்பவம் 2019 ம் வருடம் நடந்தது என்றால் ஞாபகமில்லை. அந்த காலகட்டத்தில் நான் ஒருவரிடம் பணம் வாங்கி

தருகிறேன். மேற்படி கடனை அடைத்து விடுங்கள் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்திற்கு முன் 2018 முதல் நான்பணம் கொடுத்து அதற்கு வட்டி வாங்கி வந்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கறிஞர் விடுப்பதற்கு முன்பு அசலையும், வட்டியையும் கொடுக்கவேண்டும் என்று எத்தனை முறை கேட்டேன் என்றால் ஞாபகமில்லை. வழக்கிற்காக பொய்யாக ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணம் கொடுக்கல் வாங்கல் எனது கணவருக்கு தெரியும். பிரதிவாதிக்கு பணம் கொடுப்பது பற்றி கணவருக்கு சொன்னேன். எந்த வங்கியில் அடகு வைத்தேன் என்றால் ஐஓபி வங்கியில் அடகுவைத்தேன். நகை ரூ7 இலட்சத்திற்கு அடகு வைத்தேன். மேற்படி அடகு வைத்ததற்கான நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். பணம் ரூ 500 கட்டை ஒரு மணிநேரம் எண்ணினேன். அப்போது எலக்டிரிசன் குபேந்திரன், ரஞ்சனி, நான் ஆகியோர் இருந்தோம். நான் எண்ணி கொடுத்த பிறகு தான் பிரதிவாதி வாங்கினார், புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது எலக்டிரிசனை அனுப்பி தான் ஸ்டாம்பு மற்றும் புரோநோட்டை வாங்கி வரச்சொன்னோம். ரூ 7 லட்சம் கொடுக்கும் அளவுக்கு எனக்கு வருமானம் இல்லை, என்றால் சரியல்ல. பணம் கொடுப்பதற்கு 2 நாட்களுக்கு முன் நகை அடகு வைக்கவில்லை என்றால் சரியல்ல. தோழிகளுக்கு இடையேயான மன முன்விரோதத்தை மனதில் வைத்து பிரதிவாதி குடும்பத்தை மனம் நோகும்படி அலைகழிகக வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதியின் கையெழுத்தை போட்டு கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.26 14:16:39 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

OS.No. 391/2023

**26.08.2025**

P.W.2 - குபேந்திரன்

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் மறு குறுக்குவிசாரணை</u>**

நான் 16.06.2022 அன்று நான் எனது வீட்டில் இருந்தேன். எனக்கு தகவல் சொன்ன நேரம் மாலை 2.45 மணிஎன்றால் சரிதான். ரஞ்சிதா வீட்டில் இருந்தார். இருவரும் பேசி கொண்டிருந்தனர். பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பேசி கொண்டிருந்தனர். பிரதிவாதி வீட்டிற்கு நான் போனதில்லை. நான் கண்டென்சர் கழற்றி அதை வாங்க சென்றேன். நான் நந்தவனத்தில் உள்ள தாத்தா கடைக்கு பைக்கில் சென்றேன். கண்டென்சர் வாங்கி மாற்றினேன். நான் கடைக்கு சென்று வந்த நேரம் சரியாக ஞாபகமில்லை. ஐநூறு ரூபாய் தாளை எண்ணி கொண்டிருந்தனர். எவ்வளவு நேரம் எண்ணி முடித்தார்கள் என்றால் சுமார் 1 மணிநேரம் இருக்கும். எண்ணி முடிப்பதற்கு முன் கடைக்கு சென்றேன். நான் வீனா வீட்டிற்கு போகவில்லை என்றால் சரியல்ல. பணத்தை எண்ணி கொண்டிருந்ததை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. வீனாவின் கணவர் இல்லை. வேறு யாரும் அருகில் இல்லை. வாதியானவர் எனக்கு தெரிந்தவர். வாதியானவர் பணம் எப்படி வைத்திருந்தார் என்பது எனக்கு தெரியாது. வாதியின் குடும்ப வருமானம் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியானவர் வாதியின் வீட்டிற்கு மாலை வரவும் இல்லை, மற்றும் புரோநோட்டில் கையெழுத்து வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல- இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மவிஇல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.26 14:16:49 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.